# ஆன்மீகம் அறிவியல் கலை இலக்கியம் மொழியியல்

**இன்று புதிதாய்ப் பிறந்தோம்.**

பழைமையில் காலூன்றிநின்று புதுமைகளை வரவேற்போம்.

வேற்றுமைகளிலிருந்து ஒற்றுமையை நாடுவோம்.

முரண்பாடுகளை முன்வைத்து ஒருமைப்பாடு காண்போம்.

විවිධ විද්‍යා ॐ विविध विद्या



# விவித வித்யா

# VIVIDHA VIDYA

காலாண்டிதழ்

சுபாநு, சித்திரை - ஆனி April-June 2003

குருகுலச் சிறப்பிதழ்

4

கௌரவ ஆசிரியர்:
சுரபாரதி சேவா துரந்தரர்
வித்வ சிரோமணி, வித்யா கலாபமணி,
சிவகலா பூஷணம், சம்ஸ்கிருத பண்டிதர்,
பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷர சர்மா

25/=

நிர்வாக ஆசிரியர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்)

துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வருந் தூய்மலர்க் கந்தம்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே

திருமூலர் திருமந்திரம்.

## உங்களுடன்..........

விவித வித்யா இந்த இதழும் தாமதமாகவே வெளிவருகிறது. ஆனால் பல புதிய அம்சங்கள் இதில் சேர்க்கப்படுகின்றன. இன்னும் பல புதிய அம்சங்களுடன் அடுத்த இதழ் விரைவில் வெளிவரும். உங்கள் அபிப்பிராயங்களையும் விருப்பங்களையும் நீங்கள் தெரிவித்தால் அது விவித வித்யாவின் வளர்ச்சிக்கு உதவும். நீங்கள் "விவிதவித்யா"வைத் தேடி வரக்கூடியதாக "விவிதவித்யா" உங்களைத் தேடிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்விதழ் உங்கள் கைகளுக்குக் கிடைக்கவில்லையா? உங்கள் அயலவர்களிடம் கண்டீர்களா? அல்லது கடையில் வாங்கினீர்களா? உங்கள் முகவரி எங்களுக்குக் கிடைக்கவில்லை. தயவு செய்து உங்கள் முகவரியை அனுப்பிவையுங்கள். ஒரு தொடர்பாடல் மையமாகவும் சர்வானந்தமய பீடம் திகழ்கிறது. உங்கள் அயலவர்களுக்கும் இவ்விதழைப் படிக்கக் கொடுங்கள்.

............நாங்கள்.

## வித்தையும் ஞானமும்

ஏட்டுச்சுவடி வித்யையைக் குறிப்பது. வித்யை என்றால் படிப்பு என்றுமட்டும் அர்த்தம் பண்ணிக்கொண்டு, இப்போது இருக்கிற படிப்புமுறைகளைப் பார்த்தால் வித்யை வேறு படிப்பு வேறு ஞானம் வேறு என்றே தோன்றுகிறது. வித்யைதான் ஞானம் என்கிற பழைய முறை போய்விட்டது. முன்பெல்லாம் சகல வித்யைகளும் பகவானைக் காட்டிக் கொடுக்கவே ஏற்பட்டிருந்தன. திருவள்ளுவரும் பரமேசுவரனைப் பூஜை பண்ண வைக்காத ஒரு படிப்பினால் என்ன பயன் என்று கேட்கிறார்.

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"

- காஞ்சி முனிவரின் அருளுரை

| மலர் 1 | எழுந்திரு! விழித்திரு! கோரியகருமம் நிறைவேறும்வரை உழைத்திரு! | இதழ் 4 |  |
|---|---|---|---|


முகவரி
ப.சிவானந்தசர்மா
"விவிதவித்யா"
கந்தசாமிகோயில் அருகில்,
இணுவில், சுன்னாகம், இலங்கை.


*எங்களுடன் ..................*

உங்கள் பெயர் வெளிவரவேண்டும் என்பதற்காக முகஸ்துதிகள் எழுதாமல் 'விவித வித்யா' பற்றிய உங்கள் உள்ளக்(உண்மைக்) கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுங்கள்.

*..............நீங்கள்.*

## புதினம்



ஆலயங்கள், சமய ஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், சமயப் பெரியோர்கள், அந்தண சிவாச்சாரியார்கள் பற்றிய செய்திக் குறிப்புக்களைச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் பிரசுரிக்கப்படும்.

तेजोऽसि तेजोमयि धेहि। वीर्यमसि वीर्यं मयि धेहि। बलमसि बलं मयि धेहि। ओजोऽसि ओजो मयि धेहि। मन्युरसि मन्युं मयि धेहि। सहोऽसि सहो मयि धेहि।।

𑌤𑍇𑌜𑍋𑌸𑌿 𑌤𑍇𑌜𑍋 𑌮𑌯𑌿 𑌧𑍇𑌹𑌿। 𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌸𑌿 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌮𑌯𑌿 𑌧𑍇𑌹𑌿। 𑌬𑌲𑌮𑌸𑌿 𑌬𑌲𑌂 𑌮𑌯𑌿 𑌧𑍇𑌹𑌿। 𑌓𑌜𑍋𑌸𑌿 𑌓𑌜𑍋 𑌮𑌯𑌿 𑌧𑍇𑌹𑌿। 𑌮𑌨𑍍𑌯𑍁𑌰𑌸𑌿 𑌮𑌨𑍍𑌯𑍁𑌂 𑌮𑌯𑌿 𑌧𑍇𑌹𑌿। 𑌸𑌹𑍋𑌸𑌿 𑌸𑌹𑍋 𑌮𑌯𑌿 𑌧𑍇𑌹𑌿।

Thou who art Power fill me with power. Thou who art Valour infuse valour into me. Thou who art Strength give me strength. Thou who art the Vital Essence, endow me with vitality. Wrath (against wrong) art Thou, instil that wrath into me. Thou art Fortitude, fill me with fortitude.

தேஜஸ் வடிவாயிருப்பவரே என்னுள் தேஜஸ்ஸை நிரப்புங்கள். வீர்யமுடையவரே எனக்கு வீரத்தை அருளுக. பலமுடையவரே பலத்தை என்னுள் நிரப்புக. ஓஜஸ் வடிவானவரே(உள்ளொளி) என்னுள் ஓஜஸ்ஸை நிரப்புக. கோபமுடையவரே என்னுள் கோபத்தை உண்டாக்குக. சகிப்புத்தன்மை வடிவானவரே சகிப்புத்தன்மையை என்னுள் நிரப்புக.

ஸ்தோத்திர அறிமுகம்

# கலைமகள் போற்றுதும்

ஶுக்லாம் ப்ரஹ்மவிசாரஸார பரமாம்
ஆத்யாம் ஜகத்வ்யாபினீம்।
வீணாபுஸ்தகதாரிணீம் அபயதாம்
ஜாட்யாந்தகாராபஹாம்।
ஹஸ்தே ஸ்பாடிகமாலிகாம் விதததீம்
பத்மாஸனே ஸம்ஸ்திதாம்।
வந்தே தாம் பரமேஶ்வரீம் பகவதீம்
புத்திப்ரதாம் ஶாரதாம்॥

**சுக்லாம் ப்ரம்ம விசார சார பரமாம் ஆத்யாம் ஜகத்வ்யாபினீம்**
**வீணா புஸ்தக தாரிணீம் அபயதாம் ஜாட்யாந்தகாராபஹாம்**
**ஹஸ்தே ஸ்பாடிக மாலிகாம் விதததீம் பத்மாசனே ஸம்ஸ்திதாம்**
**வந்தே தாம் பரமேஸ்வரீம் பகவதீம் புத்திப்ரதாம் சாரதாம்.**

வெண்ணிறமுடையவளும் பிரம்மஞான ஆய்வின் சிறந்த பயனாயுள்ளவளும் (எல்லோர்க்கும்) முன்னவளும் உலகில் வியாபித்திருப்பவளும் வீணையையும் புஸ்தகத்தையும் கைகளில் வைத்திருப்பவளும் அச்சந்தவிர்த்து அபயமளிப்பவளும் அறியாமையென்னும் நள்ளிருளை நீக்குபவளும் பளிங்குமாலையைக் கையில் தாங்குபவளும் வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பவளும் மேலான ஈஸ்வரியும் பாக்கியவதியும் ஞானத்தை வழங்குபவளுமான சாரதாதேவியைப் போற்றுகிறேன்.

(இந்த அழகிய சரஸ்வதி தியான சுலோகம் வடஇந்தியாவில் பிரசித்திபெற்றது. காசீ சௌகாம்பா ஸீரிஸ் வெளியீடான சித்தசரஸ்வதீ ஸ்தோத்திரத்திலும் கோரக்பூர் கீதாபிரஸ் வெளியீடான லகுசித்தாந்த கௌமுதியிலும் இந்தத் தியானம் இருக்கிறது. சித்த சரஸ்வதி ஸ்தோத்திரமும் கவசமும் அடங்கிய மிகச்சிறிய நூல் எழுத்துப்பிழைகள் சொற்பிழைகள் நிறைந்த அழகற்ற பதிப்பு. வாசகர்கள் எவரிடமாவது வேறு பதிப்புக்களோ கையெழுத்துப் பிரதியோ கிடைக்குமானால் நல்ல பதிப்பொன்று வெளியிடலாம்.)

இந்த இதழ்.........

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின்
வேத சிவாகம குருகுல கலாசாலைச் சிறப்பிதழாக வெளிவருகிறது.
அதனால் வழமையான அம்சங்கள் சில விடுபட்டுள்ளன.
அவை அடுத்த இதழ்களில் தொடரும்.

'விவிதவித்யா'வின் 3ம், 4ம் இதழ்கள் உங்கள் கைகளில் கிடைத்துள்ளன.
உங்களில் சிலர் ஏற்கெனவே முதலிரு இதழ்களையும் பெற்றுள்ளீர்கள். கிடைக்கப் பெறாதவர்கள் விரும்பினால் எம்மோடு தொடர்புகொண்டு அவற்றைப் பெறலாம்.

உங்களில் பலர் ஓராண்டுச் சந்தாவாகிய ரூபா 100.00 செலுத்தியுள்ளீர்கள். அவ்வாறு செலுத்தாதவர்கள் தயவுசெய்து அதனைச் செலுத்தி எங்கள் சுமைக்குத் தோள்கொடுத்து உதவுங்கள்.

அடுத்துவரும் ஆண்டுக்குரிய நான்கு இதழ்களையும் உங்கள் கரங்களில் நேரடியாகப் பெற்று வாசித்து மகிழவும் விவிதவித்யாவின் ஆன்மீக அறிவுக் குடும்பத்தின் அன்புமிகுந்த உறுப்பினர்களாக ஆகுவதற்கும் அடுத்த ஆண்டுக்குரிய சந்தா ரூபா100.00 இப்போதே அனுப்பி எமது கரங்களைப் பலப்படுத்துங்கள்.

தொடர்கின்ற இப்பணியில் முழுமையாக உங்களை இணைத்து எம்மை உற்சாகமூட்ட விரும்புவோர் ஆயுட்சந்தாவாக ரூபா 1000.00 அனுப்பி ஆதரவு நல்கலாம்.

ஏதாவது ஓரிதழின் முழுப்பொறுப்பையும் தாங்களே ஏற்றுத் தனித்துவமாக எம்மைத் தாங்கிநிற்க விரும்புவோர் அச்செலவின் அரைவாசியாகிய ரூபா ஐயாயிரத்தை அனுப்பி எம்மோடு இணைந்துகொள்ளுங்கள்.

எது எப்படி இருப்பினும்
உங்கள் கருத்துக்களை எம்மோடு பகிர்ந்தும்
உங்கள் ஆக்கங்களை அனுப்பியும்
செய்திகள், தகவல்களை அனுப்பியும் எம்மோடு தொடர்புகொண்டு எங்கள் ஆத்ம பலத்தை அதிகரிப்பதில் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ப. சிவானந்த சர்மா B.A.(Hons)
ஆசிரியர், "விவித வித்யா"
கந்தசாமி கோவிலடி, இணுவில், சுன்னாகம்.

செய்திக் குறிப்பு

## "பாரம்பரியத்தைவிட ஆப்தவாக்கியம் முக்கியமானது"

-பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்-

*"ஆலயங்களில் நிகழும் விசேட பூஜையின் போது வேதபாராயணத்தை அடுத்து ஆசீர்வாதத்திற்கு முன் திருமுறைபாராயணத்திற்கு முக்கிய இடம் வழங்குவதற்கு எல்லாச் சிவாச்சாரியார்களும் முன்வர வேண்டும்"* என வேதசிவாகம குருகுல கலாசாலையில் நடந்த கலந்துரையாடலின்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

சர்வானந்தமய பீடத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி அதன் தலைவர் ப.சிவானந்த சர்மா(கோப்பாய் சிவம்) நெறிப்படுத்திய இக்கலந்துரையாடல் சர்வதேச இந்தமத குருமார் ஒன்றியத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

மஹோற்சவ காலங்களில் கொடிமரத்தருகில் பண் ஓதுவதற்குரிய சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தி எல்லா ஆலயங்களிலும் ஒரேமாதிரி ஒருமைப்பாட்டைக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்தும் அங்கு முன்வைக்கப்பட்டது.

*"குருபாரம்பரிய முறைப்படி நாம் செய்துவரும் கிரியை முதலியன ஆப்தவாக்கியங்களான ஆகமப்பிரமானங்களுக்கு மாறில்லாமல் இருக்கவேண்டும். முரண்பட்டவற்றைஅப்படியே கைக்கொள்வது தவறானதாகும். குருமார் இவற்றை ஆராய்ந்து சரியானவற்றை முன்னெடுக்கவேண்டும்"* என யாழ், பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தெரிவித்தார்.

முன்னதாக பேராசிரியர் தலைமையில் நிகழ்ந்த கருத்தரங்கில் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் பிரம்மஸ்ரீ தி.நடனசபாபதிசர்மா அவர்கள் *"கிரியைகளை தவறில்லாமல் நல்லமுறையில் செய்யவேண்டும் என்பதில் எம்மவருக்கு மிகவும் ஆர்வம் இருக்கின்றது"* எனத் தெரிவித்தார்.

ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளிடையே முரண்பாடு காணப்படுவதற்கான காரணங்களையும் அவற்றைச் சீர்செய்வதிலே உள்ள நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் அவர்கள் விரிவாக எடுத்து விளக்கினார்.

"ஆலயங்களில் நிகழும் கிரியைகள் ஒருமைப்பாடு கொண்டவையாக இருப்பதற்கு இந்துக்குருமார் யாவரும் முயற்சி செய்து ஆலய நிர்வாகிகளுக்கும் சரியான விளக்கம் கொடுத்து நமது கிரியைகளை ஒழுங்கு படுத்த வேண்டும்" என சர்வானந்தமயபீட ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா தெரிவித்தார்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி அதிவந்தனீய சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா, பொருளாளர் கு. சரவணபவக்குருக்கள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

*1. விராடநகரே ரம்யே கீசகாத் உபகீசகம்।*
*ஸூத க்ரியாபதம் பஶ்ய ஹைமம் தாஸ்யாமி கங்கணம்॥*

---

**இதன் பொருள் : அழகிய விராட நகரத்தில் கீசகனிடமிருந்து உபகீசகனை என்பது சுலோகத்தைப் பார்த்தவுடன் தோன்றும் பொருள். இப்படிப் பொருள்கொண்டால் வாக்கியத்துக்குப் பயனிலைச் சொல் இல்லாத குறைவாக்கியமாயிருக்கும். புதிரை விடுவிப்பதற்குச் சொற்களைப் பிரித்துப் பார்க்கும்போது விராடநகரம், கீசகம், உபகீசகம் என்பவற்றின் பொருளும் மாறும்.**

## புதிர்ப் போட்டி—3

**சுலோகத்தின் பிற்பகுதியில்**
**"இங்கே வினைச்சொல்லைச் (கண்டுபிடித்து) சொல்பவனுக்குப் பொன்னாலான காப்பைக (பரிசாக) கொடுப்பேன்" என்று புதிரை இயற்றிய புலவர் கூறுகிறார். நம்மால் பொற்காப்புத் தர இயலாவிட்டாலும் வேறு பரிசு வழங்குவோம். வினைமுற்றைக் கண்டறிந்து எழுதுங்கள்.**

2. ம்லாநா பங்கஜமாலா கண்டே ராமஸ்ய ஸீதயா।
ஏஷா பஶ்யா ஹஸந்த்ய வ்ருத்யேஷ்வபி க்ரியாபதே॥

**பொருள் :"வாடாத தாமரைமலர் மாலை, இராமனது கழுத்தில் சீதையால்**
**இங்கு வினைச்சொல் (பயனிலை) கண்முன் இருக்கையில்**
**அறிஞர் வீணாகத் திகைக்கிறார்கள்"**

மேலேயுள்ள புதிர்களில் ஒன்றில் பயனிலை உள்ளேயிருக்கிறது. மற்றையதில் வெளியிலிருக்கிறது என்ற குறிப்பைத் தருகிறோம். பயனிலைகளை — வினைமுற்றுக்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

# ஆத்யேஷ்டிகா விதி

அநாதிருத்திரரான சிவபரமேஸ்வரர் அநாதியான ஆத்மாக்களுக்கு அநாதியான பாசத்தால் ஏற்பட்ட பசுத்வத்தை நீக்கி சிவத்வத்தை உண்டாக்க சிவாகமங்களை நன்கு உபதேசித்தருளினார். அவை காமிகாதி வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகமங்கள் ஆகும். சிவானுபவப் பேற்றையடையக் காரணங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களைக்கொண்டமைவதே சிவாகமங்களாகும். கிரியை விதிமுறைகளைக் கிரியாபாதம் விரிவாக எடுத்துக் கூறுகிறது.

இவற்றை கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷடாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என வகைப்படுத்திக் கூறலாம். கிரியாபாதத்திலே கூறப்பட்ட விதிமுறைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு கிரியைகளின் கிரமங்களைப் பிரயோக முறையில் எளிமையான நடையில் எடுத்துக் கூறுவனவே பதினெண் பத்ததிகளாகும்.

வாழ்க்கைக்குத் தேவையான எல்லா விஷயங்களும் நிறைந்துள்ள சிவாகமங்களிலும் பத்ததிகளிலும் மனிதன் வசிப்பதற்கும் ஆலயங்களில் இறைவன் பூரண சாந்நித்தியத்துடன் விளங்குவதற்குமாக ஆலயம், பவனம், வீடுகள், மாளிகைகள், சமய அனுஷ்டான இடங்கள் என்பன கட்ட ஆரம்பிக்கும் நிலையில் அடிக்கல் நாட்டுதல் அல்லது அடிக்கல் போடுதல் எனப்படும் செயலுக்குரிய வழிமுறையைக் கூறுவது "ஆத்தியேஷ்டிகா விதிமுறை"யாகும். இவ்விதியும் சரியான காலமும் சரியான அளவும் கூடிய இவ்விடத்தை (ஆத்யேஷ்டிகா செய்யப்பட்ட இடத்தை) உலகம் உள்ளவரை ஜீவன் உள்ளதாகச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

கிடைக்கப்பெற்ற ஆகமங்களிலே காமிகம், காரணம், சுப்ரபேதம், குமாரதந்திரம், ரௌரவம், அஜிதம், தீப்தம் முதலியவற்றில் இந்த "ஆத்யேஷ்டிகா விதி" ஏறக்குறைய ஒரேமுறையில் இருக்கின்றது. எனினும் பூர்வ காரணாகமத்தில் உள்ள "ஆத்யேஷ்டிகா விதிப் படலம்", "சிலா சங்கிரஹணம்", "பூபரிக்ரஹ விதி", "வாஸ்து பத விந்யாசம்", "ம்ருத் பரீக்ஷா" ஆகிய விடயங்கள் கூறப்பட்ட பின்புதான் "ஆத்யேஷ்டிகா விதி"யின் முக்கியமான பகுதி கூறப்படுகிறது. மற்றைய ஆகமங்களில் "ஆத்யேஷ்டிகா விதிப் படலத்"தில் அவ்விடயம் மாத்திரமே கூறப்படுகிறது.

பொதுவாக எங்குமே செங்கற்களை வைத்துத்தான் இதற்குரிய பூஜை செய்து அடிக்கல் நாட்டுகிறார்கள். ஆனால், விமானம் அல்லது கட்டிடம் கருங்கற்களாக இருப்பின் இந்த அஸ்திவாரக் கல்லும் கருங்கல்லாகவே இருக்கவேண்டும் என்றும் கோபுரம், மாளிகை முதலியன செங்கல்லாலாயின் செங்கற்களையே வைத்துப் பூஜித்து ஆத்யேஷ்டிகாவை ஆரம்பிக்கவேண்டும் என மேற்குறித்த ஆகம நூல்கள் வலியுறுத்துகின்றன. இதற்குப் பயன்படுத்தும் கருங்கல்லிற்கும் செங்கல்லிற்கும் அளவில்கூட உத்தம, மத்யம, அதம அளவுகள் வித்தியாசமாகக் கூறப்பட்டுள்ளன.

**பூமிலக்ஷணம்:** எந்த இடத்தில் ஆலயம் அல்லது மாளிகை கட்டவேண்டுமோ அந்த இடத்தில் ஒருமுழ ஆழம் மண்ணைத் தோண்டி அதே மண்ணால் அப்பள்ளத்தை நிரப்பும்போது அம்மண் மிகுதிப்பட்டால் உத்தமம் என்றும் சமமாயின் மத்யமம் என்றும் குறைந்தால் அதமம் என்றும் பூமியின் லக்ஷணம் கூறப்படுகின்றது.

கபில நிறமுள்ள எருதுகளால் யாகங்களுக்கு உபயோகப்படக்கூடிய புனித மரங்களாலான ஏர்க்கால்களைப் பூட்டி ஆச்சாரியர் புண்யாக வாசனம் செய்த பூமியை உழச்செய்தல் வேண்டும். ஆச்சாரியர் நேத்திர மந்திரத்தைக் கூறிக்கொண்டு அப்பூமியில் எள், கடுகு (நவதானியம் அல்ல) இவற்றை விதைத்தல் வேண்டும். இவை மூன்று இரவில் முளைவிட்டால் உத்தம பூமி எனவும் ஐந்து ராத்திரியில் முளைத்தால் மத்யமம் என்றும் ஏழு ராத்திரியில் முளைத்தால் அதமம் என்றும் கூறப்பட்டுள்ளது. பின்பு அவ்விடத்தில் ஆலயம் நிர்மாணிப்பது எனின் இட மையப்பகுதியில் இருந்து பூர்வமோ உத்தரமோ ஈசானமோ ஆத்ய பாலாலயம் கட்டிப் பூஜித்துப் பின்பு மூலாலயம் கட்டவேண்டும் என்ற விதிகளை "ஆத்யேஷ்டிகா விதிப்படலம்" கூறுகின்றது.

**மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா**

கிழக்குப் பல்கலைக்கழக சம்ஸ்கிருத விரிவுரையாளர்.

**செங்கல்லின் லக்ஷணம்:** செங்கற்களில் புள்ளிகள் உள்ளவை, குறுக்குக் கோடுகள் விழுந்தவை, கருமை படிந்தவை, யானைக்கண் உள்ளவை, சிலந்திக்கூடு போன்ற அடையாளங்கள் உள்ளவை ஆகிய தோஷங்கள் இருந்தால் அக்கற்கள் விலக்கப்படவேண்டியவை. கற்களில் சிறிது வளைந்த பகுதியை நுனியாகவும் சிறிது உயர்ந்த

பகுதியை அடியாகவும் கருதுக. நான்கு கன்னிகைகள் இக்கற்களை அலங்கரித்து பஞ்சகவ்வியத்தால் அபிஷேகித்து பொன், பட்டு இவற்றால் அலங்கரித்து ரக்ஷாபந்தனம் செய்க. இவை முன்னிரவில் செய்யப்படவேண்டிய கிரியைகளாகும்.

ஸ்தண்டிலம் அமைத்து அந்தந்தத் திக்குகளின் அடையாளத்துக்காக பூர்வபாகத்தில் (கிழக்கில்) வைக்கும் கல்லின்மேல் 'அ'காரமும் தக்ஷிணத்தில் (தெற்கில்) வைக்கும் கல்லின்மேல் 'ஆ'காரமும் பச்சிமத்தில் (மேற்கில்) வைக்கும் கல்லின்மேல் 'இ'காரமும் உத்தரத்தில் (வடக்கில்) வைக்கும் கல்லின்மேல் 'ஈ'காரமும் எழுதவேண்டும்.முறையே இக்கற்களின்மேல் ருக், யஜுர், சாம, அதர்வண வேதங்களையும் அவற்றின் அதிதேவதைகளையும் பூஜிக்கவேண்டும். பின்பு நவகலசத்தின் மத்தியில் சிவனையும் எட்டுக்கலசங்களில் லோக பாலர்களையும் பூஜிக்கவேண்டும். கிரமமாக சிவயாக அதிவாசம் செய்து மறுநாள் காலை மறுபடியும் பூஜை, ஹோமம் செய்து ஜயாதி முதலிய மந்திரங்களுடன் பூர்ணாகுதி செய்க. சுபமுகூர்த்த வேளை பார்த்து ஆத்யேஷ்டிகா செய்யவேண்டும். (அடிக்கல் ஸ்தாபிக்கவேண்டும்.)

ராஜ கோபுரம் போன்றவற்றுக்கு மண் தோண்டப்பட்ட பள்ளத்தின் தக்ஷிண மூல பாகத்தில் (தெற்கு) ஆத்யேஷ்டிகா செய்யவேண்டும். தெற்கு வாயில் கோபுரத்திற்கும் பிரகாரங்களிற்கும் ஈசானத்தில் முதலில் ஆத்யேஷ்டிகா செய்யவேண்டும் என்பது சுப்ரபேதாகமத்தின் விதியாகும்.

ஈசானம், நிருதி, அக்னி, வாயு ஆகிய மூலைகளில் வைக்கும் கற்கள் ஒன்றையொன்று அடிப்பாகத்தைத் தொட்டுக்கொள்வதாகவும் நுனிகள் சம்பந்தம் உடையவையாகவும் அடுக்கவேண்டும். மத்திய பகுதியில் நவரத்தினங்களையும் ஐந்துவித மண்களையும் (யானை குத்திய மண், புற்றுமண், நண்டுவளை மண், காளை குத்திய மண், புனித தீர்த்தத்தின் மண்) நிரப்பவேண்டும். இவைகள் கிடைக்காதபோது பொன்னையும் நதிமண்ணையும் உபயோகிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளத்தின் மத்தியில் பூஜித்த கும்ப ஜலங்களை அபிஷேகம் செய்யவேண்டும். அபிஷேக தீர்த்த ஜலம் வலப்பக்கமாக அப்பள்ளத்தைச் சுற்றினால் சுபம் என்றும் இடப்பக்கமாகச் சுற்றினால் அசுபம் என்றும் அறியலாம். அசுபத்திற்குப் பரிகாரமாக அவ்விடத்தில் சாந்தி ஹோமம் செய்யும்படி விதி கூறுகிறது.

குமாரதந்திரத்தில் கர்ப்பஸ்தாபனத்தின்மேலாவது

அடிப்பாகத்திலாவது இந்த அடிக்கல்லை வைக்கவேண்டும் எனவும் பயறு முதலிய தானியங்களுடன் உலோகங்கள், தாதுக்கள், மூலிகைகள், சந்தனம் இவற்றையும் வைக்கவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. 'ய'காரம் முதல் 'வ'காரம் வரை(ய,ர,ல,வ) என்ற பீஜங்களை பிரணவத்துடன் செங்கற்களின்மேல் அரிசிமாவினால் போடவேண்டும். கர்ப்ப மத்தியில் ஒரு கல்லும் நான்கு திக்குகளிலும் ஒவ்வொரு கல்லுமாக ஐந்து கற்கள் வைக்கப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது.

அஜிதாகமத்திலும் இம்முறையே சொல்லப்பட்டு இவ்வைந்து செங்கற்களுக்கும் முறையே நந்தா, பத்ரா, ஜயா, ரிக்தா, பூர்ணா என்ற பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

சுப்ரபேதாகமத்தில் நான்கு கற்கள் "ப்ரதமேஷ்டிகா" எனவும் கல்லின் உயரம் 3 தாலம்(36 அங்குலம்), அகலம் 2 தாலம்(24 அங்குலம்) எனவும் கூறப்பட்டு இது உத்தம பக்ஷம் எனவும் கூறப்படுகிறது. இதன் பாதி அளவு மத்திமம் எனவும் அதன் பாதியளவு அதமம் எனவும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு ஒன்பது வகைப் பேதங்கள் உள்ளன என்றும் எது பொருத்தமானதாகவும் விருப்பமானதாகவும் உள்ளதோ அதைக் கைக்கொள்ளவேண்டும் என வலியுறுத்துகிறது. கற்கள் மூலம் பெருத்திருப்பின் பெண்கல் எனவும் அக்ரம் பெருத்திருப்பின் ஆண்கல் எனவும் சமமாக இருப்பின் அலிக்கல் எனவும் அறியப்படுகிறது. ஆண்கல்லால் ஆண்சிலைகளும் பெண்கல்லால் பெண்சிலைகளும் செய்யப்படவேண்டும். பாடல புஷ்பத்தின் நிறமுள்ள செங்கற்கள் சிறந்தன.

மந்திரசகிதம் நடைபெறும் ஆத்யேஷ்டிகா பூஜை, நவகலச பூஜை, ஹோமம் யாவும் ஆசாரியாராலும் மந்திரமில்லாத கிரியைகள் யாவும் (சிலைவைத்தல், பூசுதல், அளவு பார்த்தல்) ஸ்தபதிகளாலும் செய்யப்படவேண்டும். மந்திரமுள்ள கிரியைகளை ஸ்தபதி செய்தால் தோஷமாகும். (சுப்ரபேதாகமம்)

இவ்வாறு ஆத்யேஷ்டிகா விதிப் பிரகாரம் கட்டப்படும் ஆலயம் மூர்த்தி ஸாந்நித்யம் உள்ளதாகவும் நீண்ட காலம் லக்ஷ்மீகரம் பொருந்தியதாகவும் சிறந்து விளங்கும். கட்டடங்களும் வீடுகளும் இதன்படி அமைக்கப்பட்டால் பூரண பலனைத் தருவதோடு வசிப்பவர்களுக்குக் குறையாத நன்மைகளும் மங்களமும் உண்டாகும்.

ஆங்கிலத் தமிழ்

# 'அன்னை மற்றும் பிதா முன்னறி தெய்வம்'

இது எல்லோரும் அறிந்த ஔவையார் வாக்கு. இங்கு இக்கால ஆங்கிலத்தமிழில் மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய நடை தமிழுக்கு ஆக்கமளிக்காது அழிவையே தரும் என்பதைக்காட்டவே இவ்வாறு காட்டப்பட்டிருக்கிறது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழியிலும் ஔவை வாக்கிற்போலவே மீண்டும் மீண்டும் "உம்" என்ற இணைப்பு இடைச்சொல் வருகிறதல்லவா? இவ்வாறு வருவது வீண் 'மினைக்கேடு' என்றும் ஆங்கிலத்திற்போலச் சுருக்கமாய் ஒரு 'உம்'(AND)இருந்தாற் போதும் என்றும் இந்திய எழுத்தாளர் சிலர்

## தாய்மொழியின் தவறு செய்வாரா?

கருதியதன்பயனே மேலே காட்டிய ஆங்கிலத்தமிழ் நடையின் உற்பத்தி. இந்த முறையில் மேலே உள்ள பழமொழியை மாற்றினால் எப்படியிருக்கும். "ஆல் மற்றும் வேல் பல்லுக்குறுதி,

நாலு மற்றும் இரண்டு சொல்லுக்குறுதி"

இந்தவிதமான அலங்கோலத் தமிழ்நடை முதலில் இந்திய வானொலியான ஆகாசவாணியில் ஒலித்துக்கொண்டிருந்தது. பின்பு

பண்டிதர் ச. பஞ்சாக்ஷர சர்மா

தூரதர்சனிலும் ஒளிபரப்பாகியது. இந்த நாட்டிலும் முதலில் விளம்பரங்களிலும் பின்பு செய்தித்தாள்களிலும் இந்த நோய் பற்றிக்கொண்டது. நல்லவேளை தமிழெழுத்தாளர் யாரும் இதை உபயோகிக்கவில்லை. சகவாச தோஷமாக 'அருகாமை'யை எழுத்தாளர் சிலர் பிடித்துக்கொண்டதுபோல நாளடைவில் இந்த 'மற்றும்' தொற்றுநோய் பற்றிக்கொள்ளுமா?

சில ஆண்டுகளின்முன்பு இந்நாட்டுப் பத்திரிகைகள் காணி, காணிஅபிவிருத்தி அமைச்சு என்றுதானே எழுதிக்கொண்டிருந்தன. இப்போது எதற்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி என்று மாற்றிவிட்டன? ஆங்கிலத்தில் AND என்பது இடையில் இருப்பதாலா?

கபிலபரணர் எனத் தொகுத்தும் கபிலரும் பரணரும் என விரித்தும் கூறுவதுதான் தமிழ் மரபு. கபிலர் மற்றும் பரணர் எனக் கூறுவது ஆங்கிலத் தமிழ்.

'உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகைகள்' என்று சொன்னால் விளங்காதா? 'உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகைகள்' என்று சொல்லவேண்டுமா?

'மற்றும' என்பது பல காலமாகத் தமிழ்வழக்கிலுள்ள சொல்தான். அதற்கு வேறும்,மேலும், பிறவும் என்ற பொருள்கள் உண்டு. அதன் பிரயோகம் வேறு விதம். உதாரணமாக " சேரர், சோழர், பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரும் மற்றும் குறுநில மன்னரும் அங்கு வந்திருந்தனர்."

*தமிழுக்கு ஏற்றதாக மொழிபெயர்த்தல் என்ற சரியான வழியை விட்டுவிட்டு ஆங்கிலத்துக்கு ஏற்றதாக மொழிபெயர்த்தல் என்ற தவறான வழியிற்சென்று தமிழியல்பைப் பத்திரிகையாளர்கள் சிதைக்கிறார்கள்.*

தமிழை ஆங்கிலமயப்படுத்துதல் என்பது முன்பு தமிழ் படியாத தமிழர்களும் பிறமொழியாளர்களும் உபயோகித்த பேச்சிலும் எழுத்திலும் மாத்திரமே காணப்பட்டது. இப்போதோ படித்தவர்களும் தம்மையறியாமலே ஆங்கிலத்தமிழுக்கு ஆட்பட்டுவிடுகிறார்கள். அறிந்தாலும் அது பிழையன்று என வாதாடுகிறார்கள்.

தமிழ் தெரியாமல் ஆங்கிலமுறையில் எழுதுவதை முன்பு 'பாதிரித் தமிழ்' என்று சொன்னார்கள். இப்போது இதை 'ஆங்கிலத் தமிழ்' என்று கூறலாம்.

முன்பு சமணராலும் வைணவ உரையாசிரியர்களாலும் எழுதப்பட்ட மணிப்பிரவாளத் தமிழும் முகமதியருடைய அரபுத்தமிழும் போலவே இதுவும் தமிழுக்குத் தீங்கிழைப்பது. பிழையற்ற அழகான தமிழைப் பேச எழுத விரும்புவோர் இந்த ஆங்கிலத் தமிழை இனங்கண்டு விலக்கவேண்டும். 'மற்றும்' என்பதுபோல முன்னரே வந்து நுழைந்த மொழிபெயர்ப்புத் தமிழ்கள் இன்னும் பலவுள. அவற்றையும் பின்னர் ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

தமிழ்மொழியில் நாம் செய்கின்ற இத்தகைய பல சொற்பிழைகளை சர்மா அவர்கள் தொடர்ந்து ஆராய்கின்றார்.

உ

பலருக்கும் பயன்படும்

# தொகுதிச் சொற் களஞ்சியம்

இந்து நாகரிக ~ சைவசமய பாடங்களைப்
படிக்கும் மாணவர்களுக்கும்
இப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும்
சைவசமய குருமாருக்கும்
குருமாராவதற்குப் படிப்பவர்க்கும்
சமயப் பேச்சாளர்களுக்கும்
எழுத்தாளர்களுக்கும்
சமயாபிமானிகள் யாவருக்கும்
சமய சஞ்சீவியாக
உடனுதவும் கைந்நூல்:

வேதம், வேதாங்கம், ஆகமம், சைவசித்தாந்தம்,
புராணம், இதிகாசம், இலக்கியம், இலக்கணம்,
இசை, நடனம், நாடகம்,
மேலும் பலதுறைசார்ந்த
தொகுதிப்பெயர்கள் இவையிவை என விளக்கும்

# புதிய அபிதான கோசம் என்னும்

## தொகுதிச்சொற்களஞ்சியம்

கிரந்தம், நாகரம் இரு எழுத்துக்களிலும்
தமிழ் அநுபந்தத்துடன்
விரைவில் வெளிவருகிறது.

இது ஒரு சர்வானந்தமய பீட வெளியீடு

மில்லேனியம் ஆண்டில் (2000 ஜூலை)
கால்கோள் கொண்ட

# சர்வானந்தமய பீடம்

முதலாண்டின் சாதனைகளாகச்
சுமார் பத்து நூல்களை
வெளியிட்டது.

இரண்டாமாண்டின் சாதனையாக 2002 ஜூலையில்
"விவித வித்யா"
காலாண்டுப் பத்திரிகையை ஆரம்பித்து
நான்கு இதழ்களை வெளியிட்டு
ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழும்
பலநூற்றுக்கணக்கான அறிஞர்களை
ஓர் வலைப்பின்னலில் இணைத்தது.

2003ஆம் ஆண்டு இவ்வாண்டுக்குரிய சாதனையாக
கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள்,
கலந்துரையாடல்கள், போட்டிகள்
முதலியன நடத்தி
எழுச்சியூட்டத் தொடங்கியுள்ளது.

2004ஆம் ஆண்டின் சாதனையாக
நாம் சாதிக்க வேண்டியவை என்ன என்பது பற்றி
அன்பர்களது ஆலோசனைகளை எதிர்பார்க்கிறோம்.

# செல்வத்துட் செல்வம் 3

திருச்சிற்றம்பலம்

பாவமும் பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடும் அரன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவலாளன் கலந்தருள் செய்யுமே

என்னும் தேவாரம் ஐந்தாம் திருமுறையிலுள்ளது. ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகைகளின் தொகுப்பாகும். திருநாவுக்கரசரால் பாடப்பெற்றது. மேலே காட்டப்பெற்ற தேவாரம் விளங்கும் திருப்பதிகத்திற்குப் "பாவநாசத் திருக்குறுந்தொகை" என்று பெயர். தேவாரமும் "பாவமும் பழி" என்று தொடங்குவது ஈண்டு நோக்கற்பாலது.

அதேபோலப் "பற்றாற்றார் சேர் பழம்பதியை" என்று தொடங்கும் பதிகத்திற்கும் "பாவநாசத் திருப்பதிகம்" என்று பெயர். இறைவனுக்கும் 'பாப நாசர்' என ஒரு நாமம் உண்டு. பிறவிதொறும் நாம் செய்யும் பாவங்களை நீக்குபவர் எனப் பொருள் தரும்.

பாவ புண்ணிய இருவினைகளே நமது பிறவிக்கு ஏதுக்கள். பாவ புண்ணியச் சமநிலை நமக்கு ஏற்படுமாயின் இருவினை ஒப்பு நிகழும். இருவினை ஒப்பு ஏற்படின் சத்திநிபாதர் ஆவர். அந்நிலை வாய்க்கப்பெறாதவர் அந்நிலை வரும்வரையில் பிறவி எனும் சாகரத்தில் துன்னுவர். எத்தனையோ பிறவிகளில் சேகரித்துக்கொண்ட பாவ புண்ணியங்கள் நமக்கு இன்பமும் துன்பமுமான அனுபவத்திற்கு வரும். ஒவ்வொரு பிறவியிலும் அவரவர் அனுபவிக்கத் தகுந்த பாவ புண்ணியங்களை இறைவனே நமக்கு அளந்து தருவார். அதனால் அதன் தாற்பரியத்தை நாம் அறியமாட்டோம். கண்டதே காட்சியாகக் கொண்டாடும் நாம் அவ்வுண்மையை உணராது மதிமயங்கி ஒருவரைப் பார்த்து "மிதித்த இடத்துப் புல்லும் சாகாத இவருக்கு இப்படிப்பட்ட பெருந்துன்பம் வந்ததே" என்று எண்ணி ஏங்கி இரங்குகிறோம்.

எப்படிப்பட்ட இன்பமாக இருந்தால் என்ன அல்லது அதற்கு இரட்டிப்பான துன்பமாக இருந்தால் என்ன அவை யாவும் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது ஆன்றோர் வாக்கு. இன்ப துன்பங்கள் பிறரால் நமக்குத் தரமுடியாதவை. நாமாகவே தேடிக்கொண்டவை. நாம் இறைவனுக்குச் செய்யும் அர்ச்சனை வழிபாடுகள் சிறுகச் சிறுகத் தேய்த்தாலும் எஞ்சியவற்றை நாம் அனுபவிப்பதிலிருந்து விலகமுடியாது. அதனால்தான் முத்தமிழ்விரகர் தமது வித்தக வாக்கால், "பிரமாபுரத்து

மறைஞான ஞானமுனிவன் தானுறு கோளுநாளு மடியாரை வந்து நலியாத வண்ணமுரைசெய் ஆனசொன் மாலையோது மடியார்கள்" என்று அருளிச்செய்தார். "அடியாரை வந்து நலியாதவண்ணம்" என்று நலியாத என்று அழுத்தம் கொடுத்தமை ஈண்டு சிந்திக்கற்பாலது. வாய்மை திறம்பா வாகீசனாரும் "கொடுமை பல செய்தன நானறியேன்" என்கிறார். நான் பல தீமைகள் செய்து அறியேன். அப்படியிருக்க என்னால் ஆற்றாது தோற்றாதென் வயிற்றினகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட எப்படி வந்தது? என்று இறைவனிடத்தில் ஆசங்கிக்கின்றார். திருநாவுக்கரசருடைய நிலைமையே அவ்வாறாயின் நாம் ஒருவரைப் பார்த்து வாராத நோய் இவருக்குத் தீராமல் வந்தவாறு ஏதோ என்று ஆராதிக்கலாமா?

இந்த உண்மையை உணர்ந்தே சமயாசாரியர்கள் பாவநாசத் திருப்பதிகங்களை நமக்குப் பாடித் தந்தார்கள். அப்பதிகங்களை நாள்தோறும் ஓயாது ஓதிவர, "விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல் உண்ணிய புகலிவை ஒன்றுமில்லையாம்.பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே" என்பதுபோலப் பாவம் நாசமாகும்.

– பிரம்மஸ்ரீ ச. வரதராஜேஸ்வர சர்மா
மயிலணி, சுன்னாகம்.

"துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச் சூழுலகி லூழ்வினை வந்துற்றலென்னே.......பவனாகி என்னுள்ளத்துள்ளே நின்று பண்டை வினையறுப்பா யென்றேன் நானே",

"தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ"

"நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே"

போன்ற அமுத வாக்குகள் எல்லாம் விஞ்ஞான உலகில் எமது அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞானத்தை மிளிரச்செய்யும் தேனினும் இன்சுவை பயக்கும் தெவிட்டாத அமுத வாக்குகள். சிந்திப்பார்க்குத் தெய்வ வாக்குகள் எனலாம்.

# திருமுறைச் செல்வம்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி

செய்திக் கட்டுரை

# வேத சிவாகம குருகுல கலாசாலை

அந்தண சிவாசாரியர்களைப் பயிற்றுவிப்பதற்கென்று ஈழத்தில் எத்தனையோ குருகுலங்கள் தோன்றின. தனிநபர்களாலும் தனியார் ஸ்தாபனங்களாலும் ஆரம்பிக்கப்பட்ட அவற்றுட்பல கால ஓட்டத்தில் தமது பணியை இடைநிறுத்திக்கொள்ள நேரிட்டமை துரதிர்ஷ்டமானதாகும். அவற்றுட் சில (இணுவில் தர்ம சாஸ்தா குருகுலம், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் வேதாகம ஆய்வுநிறுவன குருகுலம் முதலியன) இன்றளவும் தொடர்ந்து நடைபெறுவதையும் பெருமையுடன் குறிப்பிடலாம்.

இப்போது முதல்முறையாக அரச ஆதரவுடன் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் ஒரு குருகுலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

இக்குருகுலம் பற்றிய செய்திகள் சரியான வகையில் நம்மவர் பலருக்கும் தெரியாதிருப்பதாலும் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற அந்தணர்களும் மற்றும் இந்து சமயப் பெரியார்களும் இக்குருகுலம் பற்றித் தெரிந்துகொள்வதற்காகவும் இதன் வளர்ச்சிக்காகத் தாங்களும் இயன்றவற்றைச் செய்ய முன்வருவதற்காகவும் தங்கள் பிள்ளைகளை இக்குருகுலத்துடன் இணைத்து தரமான சிவாசாரிய பாரம்பரியத்தை வளர்ப்பதற்காகவும் சிவாசாரியப் பெருந்தகைகள் தாங்களும் இக்குருகுலத்துடன் இணைந்து புறநிலைச் செயற்பாடுகள்மூலம் தம்மை வளம்படுத்திக்கொள்வதற்காகவும் "விவித வித்யா"வின் செய்திப் பிரிவினர் குருகுல வட்டாரத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில், தனிப்பட்ட நோக்கம் எதுவுமில்லாமல் பொதுநல நோக்கத்துடன் இச் செய்திக்கட்டுரை தயாரிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு அமைச்சர் திரு தி. மகேஸ்வரன் அவர்களது இலட்சிய நோக்கங்களும் அதனைச் செயற்படுத்தும் செயலாளர் திரு க. பரமேஸ்வரன் அவர்களது திறமையும் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களது அர்ப்பணிப்பும் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையிலான பொறுப்பாண்மைக்குழுவின் நிர்வாகச்சிறப்பும் முதற்கண் விதந்து போற்றப்படுகிறது.**









பொறுப்பாண்மைக்குழுத் தலைவர்
பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ
ப. கோபாலகிருஷ்ண ஐயர்



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர்
பிரம்மஸ்ரீ
ப.மனோகரக் குருக்கள்



சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
அதிவந்தனீய
ஐ. மஹேஸ்வரக் குருக்கள்



பொறுப்பாண்மைக்குழுப்
⇦ பொருளாளர்
பிரம்மஸ்ரீ ந. சதாசிவசர்மா

பொதுச் செயலாளர்
பிரம்மஸ்ரீ ⇨
கா. சந்திரசேகர சர்மா



## பொறுப்பாண்மைக்குழு விபரம்

**போஷகர்கள்:**


1. அதிவந்தனீய பிரம்மஸ்ரீ ஐ. மஹேஸ்வரக் குருக்கள்.
   சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
2. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள்.
   நல்லை ஆதீன குருமகாசந்நிதானம்


**குழு உறுப்பினர்கள்:**

1. பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் -தலைவர்
2. பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் -உபதலைவர்
3. பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா -செயலாளர்
4. பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர் -பொருளாளர்
5. பிரம்மஸ்ரீ குமார. சரவணபவக் குருக்கள் -உபசெயலாளர்
6. பிரம்மஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்
7. பிரம்மஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள்
8. பிரம்மஸ்ரீ க.மஹாகணபதீஸ்வரக் குருக்கள்
9. பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
10. பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
11. பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா
12. பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக்குருக்கள்
13. பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா



உயர்திரு சிவ. மகாலிங்கம் (பதவிவழி)-உதவிப்பணிப்பாளர்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா (பதவிவழி) -நிர்வாக உத்தியோகத்தர்




குருகுலத் திறப்பு விழா

சில காட்சிகள்

## மாணவர் கல்விச் செயற்பாடுகள்.

மாணவர்கள் மூன்று பிரிவாக வகுக்கப்பட்டுள்ளனர்.

01. குருகுலத்தில் தங்கிநின்று கற்கும் மாணவர்கள்.
02. தினசரி வந்துபோகின்ற மாணவர்கள். (இவர்களில் பலர் அர்ச்சகராயிருப்போர்)
03. வார இறுதி வகுப்பிற்கு வரும் மாணவர்கள். (இவர்கள் பாடசாலை செல்வோர்)

எந்தவித வயதுக்கட்டுப்பாடோ, தகுதிக்கட்டுப்பாடோ விதிக்காமல் அந்தணர்கள் அனைவரும் இக் குருகுலத்தின் பயனைப் பெறவேண்டும் என்ற நோக்கில் அனைவரும் வகுப்புகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆறு மாதங்கள் நிறைவுபெற்றிருக்கும் இன்றைய நிலையில் இங்கு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 25.

## குருமண்டலம்

இம்மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை மூன்று குருமார் ஏற்றுள்ளனர்.

01. சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக்குருக்கள்
02. சிவஸ்ரீ து. சுந்தரமூர்த்திக்குருக்கள்
03. சிவஸ்ரீ கி. பங்குசக்குருக்கள்

இவர்கள் சிவாச்சாரியர்களாய் இருப்பதால் பல்வேறு குருத்துவச் சேவையிலீடுபடச் செல்லும்போது மாணவர்களின் கல்வி பாதிக்கபடாமல் இருப்பதற்காகப் பதிற் கடமை புரியும் ஆசிரியர்கள் சிலர் தெரிவுசெய்யப்பட்டு ஆசிரிய வங்கியொன்றும் தயார் நிலையில் உள்ளது.

### ஆசிரிய வங்கி

01. பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்கள் மயிலணி
02. பிரம்மஸ்ரீ சோ. ரஜதகிரீஸ்வரக்குருக்கள் மயிலணி
03. சம்ஸ்கிருதபண்டிதர் பிரம்மஸ்ரீ சி.ஜோதீந்திரக்குருக்கள் யாழ்ப்பாணம்
04. பிரம்மஸ்ரீ ச.பத்மநாபசர்மா B.A(Hons) யாழ்ப்பாணம்
05. பிரம்மஸ்ரீ ச.குமரேசசர்மா B.A (Hons) கொக்குவில்
06. பிரம்மஸ்ரீ ச. ஞானசர்மா. மட்டுவில்
07. பிரம்மஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள் நல்லூர்
08 பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் மஞ்சவனப்பதி, கொக்குவில்.

மிக விரைவில் இந்தியாவிலிருந்து வேத விற்பன்னர் ஒருவரை அழைத்துவருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

# குருகுல ஊழியர்கள்

நிர்வாக உத்தியோகத்தர் - பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A (Hons)
உதவி உத்தியோகத்தர் - பிரம்மஸ்ரீ ச. சாந்தரூபசர்மா
விடுதிக் காப்பாளர் - பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வரசர்மா
சமையலாளர் - பிரம்மஸ்ரீ செ. தட்சணாமூர்த்திசர்மா

# குருகுலமாணவர்களின் மேலதிக கல்விச் செயற்பாடுகள்

குருகுல மாணவர்களின் அறிவு விருத்தியைமுன்னிட்டுக் கணினி, ஆங்கிலம், ஜோதிஷம், பண்ணிசை, சைவசித்தாந்தம், தமிழ்மொழி, ஒழுக்கவியல், கிரியாவிளக்கம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் விபரம் வருமாறு

கணினி - பிரம்மஸ்ரீ G.கைலைவாசன்
ஆங்கிலம் - பிரம்மஸ்ரீ ச .கருணானந்தசர்மா
ஜோதிஷம் - திரு இ. இரத்தினவடிவேல்
தமிழ்மொழி, சைவசித்தாந்தம், ஒழுக்கவியல், கிரியாவிளக்கம்
- பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா, பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மா.

விடுதி மாணவர்களுக்கு இரவுநேரத்தில் விடுதிக்காப்பாளர் பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வர சர்மா கிரியைகளின் முன்னாயத்த விடயங்கள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் புராண இதிகாச விடயங்கள் என்பவற்றைக் கற்பிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அனைத்து அந்தணமாணவர், சிவாச்சாரியார்கள் யாவர்க்குமான கல்விச் செயற்பாடுகள்

குருகுல மாணவர் மாத்திரமன்றி ஏனைய அந்தண மாணவர்களும் பங்குகொண்டு பயன் பெறத்தக்கதாகப் பல புதிய செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு.

**புதுவருட நாள்வகுப்பு சில காட்சிகள்.**





சமையலாளரும்
விடுதிக் காப்பாளரும்

01. கணிணி வகுப்புக்கள்

முதற்பிரிவில் 16 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களில் 12 பேர் தொடர்ந்து கற்கின்றனர். இவர்கள் MS Word பரீட்சையை நிறைவுசெய்து Page Maker கற்கின்றனர். இரண்டாவது பிரிவில் 10 பேர் கற்க ஆரம்பித்துள்ளனர்.

02. ஆங்கிலக்கல்வி

கணிணி கற்கும் மாணவர்கள் விசேட ஆங்கில வகுப்பிற்க்கும் சமுகம் தருகின்றனர்,

**03. சேவை அடிப்படையில் சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் அவர்களால் வழங்கப்பட்டவரும் உயரிய சேவைகள்.**

17.04.2003 முதல் காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை சந்தியாவந்தனம், சமிதாதானம் செயல்முறை வகுப்புக்களும் இரவு 7.00 மணிமுதல் 9.00 மணிவரை சூக்தவகுப்புக்களும் சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் அவர்களால் நடத்தப்படுகின்றன. 14-07-03 முதல் உதகசாந்தி வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன.

**04. சேவை அடிப்படையில் பிரம்மஸ்ரீ ச. பத்மநாப சர்மா அவர்களின் மாலைநேர வகுப்பு**

மாலை 5.00 மணிக்கு வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் லலிதாசஹஸ்ரநாம வகுப்பு நடைபெறுகிறது. இவ்வகுப்புக்களை பிரம்மஸ்ரீ ச. பத்மநாத சர்மா நடத்துகிறார். லலிதாசஹஸ்ரநாமம் நிறைவுபெற்றதும் விஷ்ணுசஹஸ்ரநாமம், துர்க்காசப்தசதி முதலியனவும் தொடர்ந்து நடத்தப்படும்.

## சிவாச்சாரியப் பெருமக்களின் ஆதரவு

குருகுலம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அந்தணப்பெருமக்கள் பலரும் பல்வேறு விதத்தில் ஆதரவு நல்கி வருகின்றனர். சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள், பொதுச் செயலாளர் பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா, உபதலைவர் சிவஸ்ரீ ப.மஹாகணபதீஸ்வரக் குருக்கள், வித்வத் சபை உறுப்பினர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், குருகுல ஆசிரியர் சிவஸ்ரீ கி.பங்குசக்குருக்கள், குருகுல நிர்வாக உத்தியோகத்தர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா,விடுதிக் காப்பாளர் பிரம்மஸ்ரீ கு.ஜெகதீஸ்வரசர்மா இந்துமத குருமார் ஒன்றிய உறுப்பினர் பிரம்மஸ்ரீ நாகேந்திரக்குருக்கள், நீர்வேலி கந்தசாமி கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் கொக்குவில் மஞ்சவனப்பதி பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் அனலைதீவு வெங்கடேசக் குருக்கள் முதலிய பலரும் மேசை, கதிரை முதலிய தளபாடங்களை இரவலாக வழங்கியும் சுவர்மணிக்கூடு, பிளாஸ்டிக் கதிரைகள், குத்துவிளக்கு, காஸ் குக்கர், சிலிண்டர், காற்பலகைகள், பஞ்சபாத்திரம், மாணவர்கள் அணிந்துகொள்ள உருத்திராட்சமணிகள் என்பனவற்றை மனமுவந்து குருகுலத்திற்கு அன்பளிப்புச் செயதும் அவ்வப்போது அரிசி,



நிர்வாக உத்தியாகத்தர்

⇦

உதவி உத்தியோகத்தர்

⇨



தேங்காய், காய்கறி முதலிய பொருட்களையும் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளையும் பழங்கள் முதலியவற்றையும் வழங்கியும் குருகுலத்தின் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற பங்களிப்புக்களை நல்கி வருகின்றனர்.

வித்தியாரம்ப தினத்தன்று சர்வதேச இந்தமத குருபீடாதிபதி அவர்கள் மாணவர்களுக்கு கொப்பிகளையும், பென்சில்களையும் வழங்கினார். சர்வானந்தமயபீடம், நியந்தரி போன்ற நிறுவனங்கள் மூலமும் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபசர்மா, பிரம்மஸ்ரீ கி.பங்குசக்குருக்கள், பிரம்மஸ்ரீ செந்தில்நாதசர்மா, பிரம்மஸ்ரீ ச.ஜெயராமக்குருக்கள், பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வ.ராஜேஸ்வரக்குருக்கள் ஆகியோரிடமிருந்தும் அண்மையில் வெளியிடப்பட்ட சமஸ்கிருத நூல்கள் மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைத்திருக்கின்றன.

## இல்லற விழாக்களில் மாணவர்களுக்கான உணவு

அந்தனப் பெருமக்கள்பலர் தமது இல்லங்களில் நிகழும் விழாக்களின்போது குருகுல விடுதி மாணவர்களுக்கும் உணவு அனுப்பிவைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

## ஆலயங்களில் நிகழும் வைபவங்களில் மாணவர்களுக்கு இடம்கொடுத்தல்

ஊரெழுப்பிள்ளையார் கோவில், கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம் ஆகிய இடங்களுக்கு சம்பந்தபட்டோர் தம்செலவிலேயே குருகுல மாணவர்களை அழைத்து தமது ஆலய விழாக்களில் வேதபாராயணம் செய்வித்து நன்கு கௌரவித்து அனுப்பினர். திருநெல்வேலி சிவன்தேவஸ்தானம், நல்லூர் சிவன் தேவஸ்தானம் ஆகிய இடங்களில் நிகழ்ந்த மஹாசிவராத்திரி வைபவங்களிலும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## விழாக்கள்

சர்வானந்தமய பீடம், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஆதரவில் நூல்வெளியீட்டுவிழா ஒன்றை நடத்தியது. மாதந்மோறும் கருத்தரங்குகள் பட்டிமண்டபங்கள் முதலியனவும் நடத்துகிறது.

2ம் உலக இந்துமகாநாட்டை ஒட்டி சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் புத்தகக் கண்காட்சி ஒன்றும் நூல் அறிமுகவிழா

ஒன்றும் நடத்தப்பட்டன. கண்காட்சியை பிரம்மஸ்ரீ கு. ஜெகதீஸ்வர சர்மாவும் பிரம்மஸ்ரீ பால. முரளீதரக் குருக்களும் ஒழுங்குசெய்தனர்.

## துயரச்சம்பவம்

குருகுல மாணவர்களுக்கு வேதம் சொல்லிக் கொடுப்பதற்காகப் பதிற்கடமை புரியும் ஆசிரியராக வருகை தந்த மயிலணி பிரம்மஸ்ரீ வரதராஜேஸ்வரசர்மா அவர்கள் குருகுலத்திற்கு வரும் வழியில் விபத்திற்குள்ளாகி இன்னமும் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் சுகம்பெற வேண்டுமென்று ஒரேமனமாக யாவரும் பிரார்த்தனை செய்வோமாக.

## பாடத்திட்டமும் பரீட்சைகளும்

நான்கு அரையாண்டுப் பரீட்சைகளைக் கொண்ட இரண்டாண்டுத்திட்டமாக இப்பாடத்திட்டம் அமைகிறது.

1. அர்ச்சகாசாரியர் தரம் 1
2. அர்ச்சகாசாரியர் தரம் 2
3. சிவாசாரியர் தரம் 1
4. சிவாசாரியர் தரம் 2

இந்நான்குபரீட்சைகளிலும் சித்திபெற்று வெற்றிகரமாக இரண்டாணடுப் பயிற்சியை முடித்துக்கொள்ளும் மாணவர் சிவாசாரியமணி பட்டத்தையும் Diploma in Sivacharya studies என்ற சான்றிதழையும் பெற்றுக்கொள்வதோடு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தினால் சிவாசார்ய அபிஷேகத்தையும் அதற்குரிய கௌரவத்தையும் பெற்றுக்கொள்வார். இவர்களைப் பொருத்தமான ஆலயங்களில் நியமித்து அரசாங்கச் சம்பளத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் கௌரவ அமைச்சரவர்கள் செய்யவிருக்கிறார். முதலாவது அணி மாணவர்களுக்கான பரீட்சைகள் சுபாநு வருடம் ஆடி மாதத்தில் (2003 ஓகஸ்ட்டில்) நடத்தப்படவுள்ளன.

ஆவணி முதலாம் திகதி புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இதுவரை சேராத மாணவர்கள் செப்ரம்பர் 15ஆம் திகதிக்குமுன்னர் சேர்ந்துவிடவேண்டும். இல்லையேல் அடுத்தவருடம் 2004 ஜனவரி மாதத்தில்தான் புதிய மாணவர் அனுமதிகள் நடைபெறும்.

குருகுலம் ஆரம்பமாகும்போது இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு க. பரமேஸ்வரன் அவர்கள் கூறியதற்கிணங்க விரைவில் வெளிவாரியாகவும் சிவாசாரியர்கள் இப்பரீட்சைகளுக்குத் தோற்றிப் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் ஆராயப்படுகின்றன.

### எதிர்காலத்தில் நடைபெறவேண்டிய செயற்திட்டங்கள்

01. சிவாச்சாரியார்களுக்குரிய கிரியை சம்பந்தமான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களும், செயல்முறை வகுப்புக்களும், கலந்துரையாடல்களும் நடத்துதல்.

02. உயர்தர மாணவர், பல்கலைக்கழக மாணவர், ஆலயநிர்வாகிகள், சமய ஆர்வலர்கள் எனப் பலதரப்பட்டோருக்கும் பயன்படும் வகையில் மாதம்தோறும் கருத்தரங்குகள் நடத்துதல்.

03. அந்தண மாணவர்களுக்குத் தனியாகவும் ஏனையமாணவர்களுக்குத் தனியாகவும் சமயஅறிவுப் போட்டிகள், வினாவிடைப் போட்டிகள் நடத்துதல்

04. கவியரங்குகள், பட்டிமன்றங்கள் நடத்துதல்.

05. கலைநிகழ்வுகளை மேடையேற்றுதல்.

இவற்றின்மூலம் இளைய சமுதாயத்திற்குச்சமய வழிபாட்டுமுறைகள், கிரியைமுறைகள், வேதசிவாகம மரபுகள் ஆகியவற்றில் ஈடுபாடும் அறிவும் வளரச்செய்தல். இந்துசமயம்மீது அபிமானமும் பற்றும் வளரச்செய்தல். இந்த இலட்சிய நோக்கில் அந்தணர் அனைவரும் ஒன்றுபட்டு உறுதியோடு உழைக்க உறுதி பூண்பார்களாக.


## அனைத்து அந்தணர்களும் பயன்பெறுக.

பிரம்மஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்களால் மாலை 7.00 மணிக்கு நடத்தப்படும் சூக்த வகுப்புக்கள் உதகசாந்தி வகுப்புக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ ச. பத்மநாப சர்மா அவர்களால் மாலை 5.00 மணிக்கு நடத்தப்படும் பாராயணவகுப்புக்கள் என்பன குருகுல மாணவர்களுக்கு உரியதென மட்டுப் படுத்தப்படவில்லை. இவை திறந்த வகுப்புக்கள் என்பதால் இயன்ற வரையில் அனைத்து அந்தணர்களும் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி வந்து பயிற்சி


பெறலாம். இதுவரை வராதவர்களும் விரைவில் தொடர்புகொண்டு பயன்பெறவும்.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வைதிகக் கிரியா வகுப்புக்களிலும் பங்குபெற விரும்பும் பெரியோர்கள் உடனடியாகத் தமது பெயர்விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். காலையில் நிகழ்ந்த சந்தியாவந்தனம், சமிதாதானம், பிரம்மயஜ்ஞம் ஆகிய வகுப்புக்கள் புதிய மாணவர்களுக்காக ஆவணி மாதத்தில் மீண்டும் மஹாதேவக் குருக்களால் ஆரம்பிக்கப்படும். வெளி மாணவர்கள் இப்போதே தமது பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்.

**அனைத்து அந்தணர்களும் குருகுலத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு குருகுலத்தின்மூலம் தாங்கள் பெறக்கூடிய நற்பயன்களைப் பெறுவதோடு தம்மால் இயன்ற உதவிகளையும் வழங்கி அதனை வளர்க்க முன்வரவேண்டும்.**



*2வது உலக இந்து மகாநாடு*



*உபாகர்மம்*

**இந்துசமயத்தின் சகலவிதமான சேவைகளின் மையமாக இக்குருகுலம் வளர்ந்து வருகிறது.**

## சொல்விற்பனப் போட்டி – 3

1. தீவிரமான தமிழபிமானிகள் சிலர் தமது தேவைகருதி வடமொழிச் சொற்கள் சிலவற்றைத் தமிழ்ச்சொற்கள் என்று வாதாடுவதுண்டு. அவர்கள்கூடப் புவி என்ற சொல் வடசொல் என்பதை ஏற்றுக்கொள்வர். ஆயினும் வடமொழி அகராதிகளிலோ நிகண்டுகளிலோ பூமியின் பெயர்கள் பலவற்றில் புவி என்னும் சொல் இடம்பெறாததன் காரணம் யாது?

2. நால்வேதங்களில் மூன்று வேதங்களின் பெயர்கள் தமிழில் சரியாய் வழங்கும்போது இரண்டாம் வேதத்தின் பெயர் யசுர்(யஜுர், எசுர்) என்று தவறாய் வழங்கிவருகிறது. இதில் என்ன தவறு? எவ்வாறு தவறு ஏற்பட்டது?

3. விதவை என்ற சொல்லுக்குக் கணவனை இழந்தவள் என்பது பொருள் என்று பலரும் அறிவர். இதற்கு எதிர்ப்பாற்சொல் (மனைவியை இழந்தவனைக் குறிக்கும்) விதுரன் என்று சிலருக்கே தெரியும். பாரதக்கதையில் பாண்டுவின் சகோதரனுக்கும் விதுரன் என்று பெயர் வழங்குகிறது. அவனும் மனைவியை இழந்தவனா? அப்பெயர்க்குப் பொருள் யாது?

4. ஆறு தாயருள்ளவன் என்னும் பொருளில் முருகப் பெருமானுக்கு ஷாண்மாதுர என்று ஒரு பெயர் வழங்குவதுபோல துவைமாதுர (த்³வைமாதுர: இரு தாயருள்ளவன்) என்று ஒரு தேவனும் ஓர் அரசனும் பெயர் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் யாவர்? விளக்குக.

புதிர்ப்போட்டிக்கும் இப்போட்டிக்கும் முடிவுதிகதி 01. 09 2003. இதற்கு முந்திய இதழ்களிலுள்ள போட்டிகளுக்கும் இதே திகதிக்குள் விடைகளை அனுப்பலாம். எல்லாப் போட்டிகளிற்கான விடைகளும் விவித வித்யா வின் இதழாகிய ஆண்டுமலரில் இடம்பெறுவதுடன் வெற்றி பெற்றவர்களுக்கான பெறுமதிமிக்க பரிசில்கள் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆண்டு விழாவில் வழங்கப்படும்.

**ஆவலுடன் காத்திருங்கள்.......**

அடுத்த இதழ்...........

**முதலாவது ஆண்டு நிறைவு மலர்!**

**–அதிக பக்கங்கள்!!**

**நீங்களும் ஆக்கங்களை அனுப்புங்கள்.**

**இடம்பெறும் சில இனிய பகுதிகள்~~~**

**வழமையான......**

ஸ்தோத்திர அறிமுகம்
சம்ஸ்கிருதம் வளர்த்த சான்றோர்
ஜோதிஷ பாடம்
ஐயம் தெளி அரங்கு
தாய்மொழியில் தவறு செய்யலாமா?
பட்டி மண்டபம்
பாட்டி மண்டபம்
புத்தகத்தோட்டம்

**மற்றும்.........**

போட்டிமுடிவுகளும் புதிய போட்டிகளும்
பரீட்சார்த்திகளுக்கான சம்ஸ்கிருத இலக்கண பாடங்கள்
விவேகானந்தர் காட்டும் சீதை
வடமொழித் தனிப்பாடல்கள்
(சுவைமிக்க சுலோகங்கள்)
சம்க்ஷேப வார்த்தைகளும் சங்கேத வார்த்தைகளும்
சமய நூல்களில் இலக்கிய நயம்

இன்னும் பல சுவையான பகுதிகள்...........